குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.92/2020

அ.சா.3

2025–ம் ஆண்டு நவம்பர் 18–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரியா | தொழில் | |
| கணவர் பெயர் | கோவிந்தராஜ் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.10 மணி,

Accused Jayakumar present. Advocate Mr.Dhanakoteeswaran present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பனங்காட்டில் முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலை அருகே சிவா கார்டனில் குடியிருந்து, பழக்கடையில் வேலை செய்து வருகிறேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு பகல் சுமார் 01.00 மணியளவில், முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலை ஓரமாக எனது வீட்டின் முன்பாக நான் இருந்தபோது, சாலையில் வாகனங்கள் மோதிய சத்தம் கேட்டது.

2. வெங்கடேஷ் என்பவர் இருசக்கர வாகனத்தில் ஓமலூர் பக்கமிருந்து முத்துநாயக்கன்பட்டி நோக்கி சென்றார். அப்போது டாடா ஏசிஇ வாகனம் முத்துநாயக்கன்பட்டி – ஓமலூர் நோக்கி வந்து இரண்டு வாகனமும் மோதிக்கொண்டது. எந்த வாகனம் மோதி விபத்து ஏற்படுத்தியது என்று நான் பார்க்கவில்லை. விபத்தில் சம்மந்தப்பட்ட இரண்டு வாகனங்களின் பதிவெண்கள் தெரியாது. டாடா ஏசிஇ வாகனத்தின் ஓட்டுநர் பெயர் ராஜா மகன் ஜெயக்குமார் என்று சொன்னார்கள். வெங்கடேஷ் ஓட்டி வந்த வாகனத்தின் பதிவெண் 1643 ஆகும்.

3. வெங்கடேஷ்க்கு காதில் இரத்தம் வந்து விட்டது. வெங்கடேசின் அப்பாவிற்கு போன் செய்தோம். அவர், சம்பவ இடத்திற்கு வந்தார். தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.18 17:13:21 +0530

அவரை ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அதன்பின்பு அவர் எஸ்.கே.எஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், அதன்பின்பு சேலம் அரசு மருத்துமவமனையில் மேல்சிகிச்சை பெற்ற போது அவர் சிகிச்சை பலனின்றி அவர் இறந்துவிட்டார். போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. கடந்த 08.09.2019 ஆம் தேதி 13.30 மணியளவில் ஓமலூர் – முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலையில் வெங்கடேஷ் என்பவர் டி.என்.30 பி.எஸ்.1643 என்ற பதிவெண் கொண்ட ீஹரோ ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தில் முத்துநாயக்கன்பட்டி நோக்கி சென்றபோது அதே சாலையில் அவருக்கு எதிர்திசையில் ஓமலூர் நோக்கி ஆஜர் எதிரி டி.என்.52 இசட். 7932 என்ற பதிவெண் கொண்ட டாடா ஏசிஇ வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, வெங்கடேஷ் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றாலும் அதை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் விபத்தினை பார்க்கவில்லை.

5. விபத்தினை நேரில் பார்த்துவிட்டு, விசாரணையின்போது மேற்கண்ட சங்கதிகளை கூறிவிட்டு தற்போது சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.20 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.18 17:13:25 +0530